DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.271/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. P.W.7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சம்பத்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் தனிப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 20.06.2022 ம் தேதி காலை 6.30 மணியளவில தலைமை காவலர் 1265 சுந்தரம் என்பர் நிலைய அலுவலில் இருந்து சின்ன வீரன் பட்டி தட்டான் தோட்டத்தை சேர்ந்த சண்முக சுந்தரம் என்பவரின் மகன் மதியழகன் என்பவர் கொடுத்த எழுத்து மூலமாக பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 337/2022 ச/பி 279, 337 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் நகநகல்களை கனம நீதிமன்றத்திற்கும் ஒரு நகலை விசாரணைக்காக வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டுஅன்றைய தினமே பன்னிரண்டு முப்பது மணிக்கு தம்முடன் சென்று சாட்சிகள் பாலகுமார் கவியரசு ஆகியோர் முன்னிலையில் மாதிரி

வரைபடமும் பார்வை  மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம்  அசா.ஆ .4 என்று குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் மதியழகன் பாலாஜி குமாரசாமி விசாரித்து ஆகியோரை  தனித்தனியாக வாக்குமூலம்  பதிவு செய்தேன்.

3. பின்பு வழக்கு புலன் விசாரணையில் இருந்து சமயத்தில் காயம் பட்ட சண்முகசுந்தரம் வேல் தனியார் மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக கோவை சிஎம்சிஎச் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலன் இன்றி 21 6 2022 ஆம் தேதி காலை 6. 35 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலை பெற்று வழக்கின் சட்டப்பிரிவுகளை 279 , 337 இலிருந்து 279,  304(A) இதசவாக மாறுதல்செய்து சட்டப்பிரிவு  மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து  வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். **சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ.5  என குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** பின்னர் காவல் ஆய்வாளர் அன்றைய தினம் வேறு அலுவலில் இருந்ததால் இறந்து போனவரின் பிரேதத்தின் மீது  உத்தரவின் படி கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்து போன சண்முகசுந்தரம் மீது பஞ்சாயத்து சாட்சிகள் சதீஷ்குமார், மூர்த்தி, கிட்டுசாமி, கிரீஸ் குமார் முருகானந்தம் ஆகியோரை விசாரித்து  பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன் . **பிரேத  விசாரணை அறிக்கை அசா.ஆ .6 என்று குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** பின்னர் இறப்பின் காரணம் அறியப்பட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் சுந்தரம் என்பவரின் பொறுப்பில் ஒப்படைத்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அசா.ஆ .7 என்று குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றை தினமே  சாட்சிகள் மதியழகன் தட்சிணாமூர்த்தி மகாலிங்கம் பழனிச்சாமி விசாரித்து வருவாக்கு மூலம் பதிவு செய்தேன். சாட்சி அன்பழகன் என்பவரின் விசாரித்து **வாக்கு மூலம் பதிவு** செய்தேன்.  பின்னர் வழக்கு கோப்பினை 23.06.2022 ம் தேதி காவல் ஆய்வாளர் வசம் ஒப்புவித்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இறந்த நபர் ரோட்டின் இருசக்கர வாகனத்தை ரோட்டின் மேல் புறம் இருந்து  கிழபுறமாக குறுக்காக கடந்து சென்றார் என புகாரில் செல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  கண்ணால் பார்த்த சாட்சிகள் எந்த டீ கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள் என்ற விபரத்தை புகாரிலும் வாக்குமூலங்களிலும் சொல்லவில்லை  என்றால் சரிதான்.

ரோட்டின் இருபுறமும் உள்ள கடைகள் மற்றும் வீடுகளில் உள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இரண்டு சக்கர வாகனத்தை தள்ளி கொண்டு சென்றதாக சொல்லியுள்ள நிலையில் வலது புறம் இருந்து தள்ளி கொண்டு சென்றாரா அல்லது இடது புறத்திலிருந்து தள்ளி கொண்டு சென்றாரா என்ற விபரம் வழக்குக் கோப்பை இல்லை என்றால் சரிதான்.

2. பார்வை மகசரில் சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என வழக்கு கோப்பை இல்லை என்றால் சரிதான். ரோட்டின் கிழபுறம் என்பது எதிரிக்கு சரியான பாதை என்றால் சரிதான். இறந்த நபருக்கு வாகனர் ஓட்டுனர் உரிமம் மற்றும் இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரியாக குற்றம் சாட்டப்பட்ட நபர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த நிலையில் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை.
3. புகார் நீதிமன்றத்திற்கு மூன்று நாட்கள் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் தலைமை காவலர் 1265 சுந்தரம் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த ஆவணங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபர் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நிலையில் அவருக்கு வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை என்ற என்பதால் தள்ளி கொண்டு சென்றதாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.